ISSN 2792 - 1050

# வெண்ணிலா

காலாண்டிதழ்.
QUARTERLY.

වෙණ්ණිලා - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.










2வது ஆண்டு... இதழ்: 07 - ஒக்டோபர் 2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Jesa Grafix

Graphic Designing & Printing

***No. 289, Main Street, Maruthamunai***

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

# 075 656 9393

**jesagrafix24@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

**2வது ஆண்டு... இதழ்: 07 - ஒக்டோபர் 2022. ISSN 2792 - 1050**


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்.**

முகவரி:
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
kavignarsagaffar@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968 671.
**வட்ஸ்அப்:**
077 6968 671.



**Digital Printing:**
S. A. Jezeem,
Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC

**Published by:**
Digital Information System (DIS)


**சந்தா விபரம்:**

தனி இதழ் ரூபா. 50/=

நான்கு இதழ்களுக்கான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 200/=. வெண்ணிலா அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்த முடியும்.

தபாலில் பெற்றுக்கொள்ள தபால் செலவு உட்பட நான்கு இதழ்களுக்குமான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 400/=

**நீங்கள் செய்யவேண்டியது:**

Mr. S. A. ABDUL GAFFAR, BANK OF CEYLON, A/C No.: 6106068 என்ற இலக்கத்திற்கு ரூபா. 400/= சந்தாத் தொகையைச் செலுத்திவிட்டு உங்கள் முகவரி மற்றும் விபரங்களை kavignarsagaffar@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 0776968671 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கோ அனுப்பிவைக்கவும்.

**அட்டையில்:**

**மூத்த எழுத்தாளர், கவிஞர் அமரர் கலாநிதி இ. முருகையன் அவர்கள்.**
**கவிஞர் முகமட் றாபி (றாபியின் கிறுக்கல்கள்) அவர்கள்.**
**மூத்த எழுத்தாளர், நாடகாசிரியர் கவிஞர் மர்கூம் எம். எச். எம். ஷம்ஸ் அவர்கள்.**
**வெண்ணிலா வாசகர்களுடன் பேரபிமானி மர்கூம் ஒமர் பாறூக் செய்யது இஸ்மாயில் அவர்கள். (இடமிருந்து வலம் ஆறாவதாக கைக்கடிகாரத்துடன்.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

**இரங்கல்:**


- பேரபிமானி மர்கூம் செய்யது இஸ்மாயில்.....5


**குறிப்பு:**


- மற்றுமோர் இலக்கிய... - கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்.....6


**தடம்பதித்த மூத்த கவிஞர்கள்:**


- கங்கையாளே! - கவிஞர் இ. முருகையன்.....9
- வெண்புறாவே! - கவிஞர் எம். எச். எம். ஷம்ஸ்.....10


**மஞ்சரி கவிதைகள்:**


- நிலையில்லா... - கவிஞர் வசந்த தீபன்.....12
- வேசம் போதும் - கவிஞர் எம்சியே பரீத்.....13
- இன்னும் கொஞ்சம்... - கவிதாயினி மயிலிறகு மனசு ஷிபானா அஸீம்.....14
- சமகால சோகங்கள் - கவிதாயினி Dr. ஜலீலா முஸம்மில்.....15
- நட்பாசை - கவிஞர் கே. பாலன்.....16
- நிஜம் தோற்கும்... - கவிதாயினி வானம்பாடி முஜா.....17
- இதுவா இனி வாழ்வு - கவிஞர் மருதூர் ஜமால்தீன்.....18
- விரிக்கப்படாத சிறகுகள்- கவிதாயினி சம்மாந்துறை மஷூறா.....19
- வாழ்வின் அழகு - கவிதாயினி மாஹிறா ஹமீட்.....20
- பேரின்பம் பூரிப்பை... - கவிஞர் புன்னகை வேந்தன்.....21
- புதுயுகம் பிறக்கட்டும் - கவிஞர் அலியார் T. O. .....22
- ஜென் கவிதைகள் - ராஜகவி ராகில்.....23
- விண்வெளி... - கவிதாயினி செ. நாகநந்தினி.....24


**படித்தவற்றில் பிடித்தவை:**


- அம்மா - கவிஞர் வி. உ. இளவேனில்.....26
- மறதி - கவிஞர் ஏரூர் கே. நௌஷாத்.....27
- துளிர்த்த மரம் - கவிஞர் தாமோதரன் ஸ்ரீ.....28
- ஊரவர்கள் - கவிஞர் டீன் கபூர்.....29
- குறைகள் - கவிஞர் மலீஸ் அமீன்.....30
- காற்றுக்கு ஊனமில்லை- கவிஞர் ஜே. வஹாப்தீன்.....31
- என் கவலை - கவி செல்வ ராணி.....32
- அருகிலுள்ள கடல் - கவிஞர் ரோஷான் ஏ. ஜிப்ரி.....33
- மணம் தொலைத்த... - கவிஞர் ப. தனஞ்ஜெயன்.....34
- வாழ்க்கை - கவிதாயினி மேகா மிர்ஷா.....35
- எழுதிப்பார்த்தது... - கவிஞர் சுலைமாலெவ்வை சின்னத்தம்பி.....36
- மாயபூமி - கவிஞர் முகமட் றாபி.....37
- யாது சொல்லி... - கவிதாயினி ஷஹ்லா ஷரீப்.....38
- அனல் தொண்டை - கவிஞர் வ. அதியமான்.....39
- இரு முகம் - கவிதாயினி ஜன்ஸி கபூர்.....40


**முகநூல் பதிவு:**


- கவிதை என்பது... - றியாஸ் குரானா.....41


**உங்களிடமிருந்து:**



- இதழ் பற்றிய... - குர்ஷித் மஜீத், ராஜகவி ராகில், ஹுமதா, மஷூறா..42





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலாவின் பேரபிமானியும் சிரேஷ்ட ஆலோசகருமான அன்பு நண்பன் மர்ஹூம் ஓமர் பாறூக் செய்யது இஸ்மாயில் அவர்கள்.



ஏப்ரல், 1978 காலப் பகுதியில் **வெண்ணிலா** கலை - இலக்கிய சஞ்சிகையினை வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொண்ட வேளை அதிஸ்டவசமாகக் கிடைத்த நண்பன் தான் இஸ்மாயில் அவர்கள். அவரது சகோதரர் காலஞ்சென்ற அன்வர் அவர்கள் மூலம் அறிமுகமானவர். அன்வர் அவர்களும் நானும் மருதமுனை இளம்பிறை அச்சகத்தில் வேலை செய்தபோது தன் சகோதரரைச் சந்திக்க வரும்போதெல்லாம் என்னுடன் அன்பாக உரையாடுவார்.

நண்பன் இஸ்மாயில் அவர்கள் சிறந்ததோர் வாசகனாகத் திகழ்ந்தவர். அவர் பிறந்து வளர்ந்து கல்வி கற்ற இடம் தலைநகர் என்பதால் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள் பலவற்றைத் தேடிப் படிப்பதில் மிக ஆர்வமாக இருந்தவர். அன்றைய இந்திய எழுத்தாளர்களான சாண்டில்யன், சுஜாதா, வாஸந்தி பற்றி அடிக்கடி நினைவூட்டுவார். ஆனந்த விகடன், கல்கி, கற்கண்டு, குமுதம் போன்ற சஞ்சிகைகளைத் தொடர்ந்து படித்து வந்தவர்.

திருமண பந்தத்தின் மூலம் மருதமுனையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல வருட காலம் முகாமைத்துவ தரத்திலான பதவிகள் வகித்தவர். நண்பர்களுடன் மிக இனிமையாகவும் பணிவாகவும் பழகும் பண்பு அவரது முகாமைத்துத்தின் கீழ் பணிபுரிந்த ஏனைய வெளிநாட்டவர்களின் நன் மதிப்பையும் நட்பையும் பெற்றுக்கொடுத்தது. அதன் பயனாக பிற மொழிகள் பலவற்றைப் பேசும் பேறு பெற்றிருந்தார்.

**வெண்ணிலா** கவிதை மஞ்சரியின் பேரபிமானியாகவும் சிரேஷ்ட ஆலோசகராகவும் இறுதி வரை செயற்பட்டவர்.

கடந்த 17-07-2022 அன்று சொந்த அலுவல்கள் காரணமாக கொழும்பு சென்றபோது திடீர் சுகயீனமுற்று சிகிச்சை பலனின்றி தனது 70வது வயதில் மரணமானார்கள். பிறந்து வளர்ந்த மண்ணிலேயே நல்லடக்கமும் செய்யப்பட்டது.

பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் **வெண்ணிலா** தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றது.

- இதழாசிரியர்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமோர் இலக்கிய நகர்வுக்கான பயணம்.

**- கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட் -**

கவிஞர், எழுத்தாளர்
முகநூலில்
றாபியின் கிறுக்கல்கள்
என்று அறிமுகமானவர்
முகமட் றாபி.

இன்று மற்றுமோர் இலக்கிய நகர்வுக்கான பயணத்தைத் தொடங்கினேன்.

எனது ஊரில் உள்ள மூத்த எழுத்தாளர்களைச் சந்தித்து அவர்களோடு சிறிது நேரம் உரையாடி நல்ல படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வது என் நோக்கமாக இருந்தது.

அந்த நகர்வில் இன்று எழுத்தாலும் தங்களின் மிருதுவான தன்மைகளினாலும் மனதில் நீங்கா இடம்பிடித்த இரு ஆளுமைகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இருவரும் மருதமுனை கிராமத்தை சேர்ந்தவர்கள் இருவரும் கவித்துவ சிந்தனையாளர்கள்.

தன்னகத்தே பெரும் ஆற்றல்களை கொண்டவர்களாக இருந்தும் கூட காலத்தின் தேவை ஆளுமைகளை பெரிதும் வெளிக் கொண்டுவர முடியாது போனாலும் மருதமுனை கிராமத்தின் பெயரை உலகறியச் செய்த கலைஞர்களில் இவர்களையும் நான் காணுகிறேன்.

முகநூல் பக்கத்தில் இவர்களை அறிந்த நான், அவர்களை நேரில் சந்திப்பதை குறிக்கோளாக கொண்டு அவர்களை அணுகி நல்ல பல சிந்தனைகளையும் அனுபவங்களையும் தன் பக்கமாக எடுத்துக் கொண்டேன்.



- முகமட் றாபி -

என் சக்கரம் நகர்ந்த நகர்வில் முதலில் நான் சந்திக்க முற்பட்டவர் வரிசையில் -

கவிஞர், எழுத்தாளர், முகநூலில் றாபியின் கிறுக்கல்கள் என்று அறிமுகமானவர் முகமட் றாபி. இவருடனான அறிமுகம் மற்றும் தொடர்பாடல் மிகக் குறைவாக இருந்தாலும் கூட முதல் சந்திப்பிலேயே அறிவுக்கு எட்டியவாறு நன்கு அறிமுகமாகிக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை சந்தித்து பேசுவதற்காக அழைப்பெடுத்த போது உடனே சந்திக்கலாம் வாருங்கள் என்று சொல்ல என் சக்கரமும் மெல்ல நகர்ந்தது.

என் வருகையை எதிர் பார்த்து வீதியிலே காத்திருந்த கவிஞர் முஹம்மட் றாபி அவர்களின் இப் பண்பில் நான் வியந்து போனேன்.

மருதமுனை கலை இலக்கிய வரலாற்றில் இவருக்கும் பங்குண்டு என்பதில் மாற்றமில்லை ஆனாலும் இலை மறை காயாக சில காலங்களை கடத்த வேண்டிய கட்டாயத்தின் பேரில் திணிக்கப்பட்டவர். ஆனாலும் கூட அவர்களின் முயற்சிகளும் கற்பனைத் திறனும் தோற்றுப் போனதாகவும் இல்லை.

இருவரும் அரை மணி நேரம் வரை பேசிக் கொண்டோம். இருவரும் குடும்பப் பின்னணிகளை சொல்லிக் கொண்டு அறிமுகமாகிய கணப் பொழுதில் நிறைய விடயங்களை பரிமாறிக் கொண்டோம்.

பின்பு கவிதை பேசினோம், இலக்கியம் பேசினோம், ஆவணச் சேகரிப்பு பேசினோம் சஞ்சிகை பற்றி பேசினோம், எமதூரின் இலக்கிய வரலாறு பேசினோம், சக கவிஞர்கள் பற்றி பேசினோம், மரபுக் கவிதை பற்றி பேசினோம், கடந்த கால அனுபவப்பகிர்வுகளும் பேசினோம்.

அது போக ஏலவே முகநூலில் இருவரும் நண்பர்கள், இவர் கவிதைகளின் தீவிர ரசிகர்களில் நானும் ஒருவன்.

என்ன சொல்வது அவர் கவிதைகளில் கையாண்டுவரும் கற்பனை வளம், மொழியின் கூர்மை, சொல் இலக்கிய பிணைப்பு, சந்தம், ஓசை, உவமானம், ஒப்புவமை, என்பன அவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்.

நெசவுத் தொழிலை தன் ஜீவனோபாயமாக கொண்ட இவர் தறிகளின் தாளத்திலும் நூலின் இளைகளை கோர்வை செய்யும் ஓசையிலும் தன்னை புடம் போட்டவர், இவர் இயற்கையை இரசிக்கும் விதமும், பேச்சில் கொண்ட கூர்மையும், சிந்தனையில் கொண்ட நேர்த்தியும் இன்னும் இன்னும் என்னை வியப்பில் ஆழ்த்தியது என்பேன்.

அண்மையில் முகநூலில் இவர் பதிவு செய்த ஒரு கவிதை என்னை வியப்பில் ஆழ்த்தியது. எம் மருதமுனை கிராமத்தின் அழகையும் பொலிப்பையும் என்னுள்ளே மிகைக்கச் செய்தன அந்த வரிகள்.

●●●

**வெண்ணிலா**
சஞ்சிகையின்
பிரதான ஆசிரியர்
கவிஞர், எழுத்தாளர்
எஸ். ஏ. கப்பார்.

அன்றைய தினம் மறுபடியும் சக்கரங்கள் மெல்ல நகர்ந்து ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் **வெண்ணிலா** சஞ்சிகையின் பிரதான ஆசிரியர் கவிஞர் எழுத்தாளர் எஸ். ஏ. கப்பார் இல்லத்தை அடைந்தன.

முன்கூட்டியே அறிமுகம் இருந்ததால் முகமன்கூறிக் கொண்டு இருவரும் வீட்டு வரவேற்பறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டோம். நான் அவரது நிலவு அவள் கவிதை நூலை வாசித்த அனுபவத்தினையும் என் சொந்த முயற்சிகள் பற்றிய ஆலோசனைகள் அனுபவப் பகிர்வுகளையும் பறிமாறிக் கொள்ள இதற்கு இடை நடுவில் ஒரு தேனீர் உபசாரமும் நடந்து முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனை கலை இலக்கிய வரலாற்றில் இவருக்கும் பங்குண்டு என்பதில் மாற்றமில்லை. ஆனாலும் இலை மறை காயாக சில காலங்களை கடத்த வேண்டிய கட்டாயத்தின் பேரில் திணிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

மிக நீண்ட நேரம் **வெண்ணிலா** சஞ்சிகை பற்றிப் பேசிக் கொண்டோம்.

அது *1978* காலப் பகுதியில் நூலாசிரியரின் *18* ஆவது வயதில் ஆரம்பிக்கப்பட்டது. முறையாக பல நகர்வுப்படிகளை கடந்து வந்த விடயங்கள் பற்றியும் பேசலாயிற்று.

நாங்கள் இருவரும் கவிதைகள் பற்றி பேசினோம், இலக்கிய நகர்வுக்கான பயணத்தை பற்றி பேசினோம், கவிஞர்கள் பற்றி பேசினோம், புத்தகங்கள் பற்றி பேசினோம். இப்படியாக பேச்சுக்கள் நீடித்தன.

கவிஞர், எழுத்தாளர் எஸ். ஏ. கப்பார் அவரைப் பற்றி என்ன சொல்லுவது அவரது கற்பனை திறனும் மொழி விருத்தியும் இலேசான மொழிநடையும் மிருதுவான முறையில் சொற்களை அவர் ஆட்சி செய்திருக்கும் யுக்தியும் அவ்வளவு அழகானது இரசனை மிக்கது.

அது மட்டுமல்லாது மற்றவர்களோடு நடந்து கொள்ளும் விதமும் உபசரிக்கும் முறையும் நேர்த்தி மிக்கது.

கவிஞர் எழுத்தாளர் எஸ். ஏ. கப்பார் எழுதிய **நிலவு அவள்** கவிதை தொகுப்பு அண்மையில் அவர் இல்லத்தில் வைத்து அவரால் கையளிக்க நான் பெற்றுக் கொண்டேன். அப்புத்தகத்தில் உள்ள அத்தனை கவிதைகளும் அவ்வளவு கலை இலக்கிய இரசனை மிக்கதும் மனதை மிகவும் இலகுவில் பற்றிக் கொள்ளக்கூடிய தாகவுமே காண்கிறேன். அதை பற்றிய அனுபவப் பகிர்வை அண்மையில் பகிர்ந்து கொண்டேன்.

அதற்காக நான் எழுதிய வாழ்த்து - என் உள்ளத்தில் இருந்து சிலவரிகள்:

"நிலவு அவள்" தொகுதி
நீங்கிடாது ஒருநாளும்
உம் புகழ் சொல்லி
பூத்துக்கிடக்கும் - இவ் வையகத்தில்.

வாசித்தேன், சுவாசித்தேன்
வாசகனாகிப் போனேன்.
யாசித்தேன், நேசித்தேன்
யாதுமாகிப் போனேன்.

வரிகளில் உறைந்தேன்
வார்த்தைகளை நோக்கினேன்.
எண்ணற்ற சொற்களில்
என்னையே மறந்தேன்.

சொற்களின் முதிர்ச்சி,
வாக்கியப் பிணைப்பு,
வல்லவன் உமக்களித்த
வரமென்று சொல்வேன்.

தமிழ்மீது பற்றும்,
தாராள குணமும்,
தடை தாண்டும் திறனும்,
மேலும் அவன் தந்த அருளே.

கவி நயமும், மொழி நடையும்
காண்போரை ஆதரிக்கும்
பண்பும், கவிஞரான உமக்கு
மறையோன் தந்த பொக்கிஷமே.

அழகான வடிவமைப்பாலும்,
சீரான தொகுப்பாலும் இன்று
"வெண்ணிலா" சஞ்சிகை
ஆசிரியராய் அவரை காணுகிறேன்.

சான்றோரை ஆதரித்து,
ஆக்கங்கள் பல செய்து
தொடராக வெளியிட்டு
தொண்டு செய்தீர்.

சீக்கிரமே வெண்ணிலவாய்
உயர்ந்திடவே வாழ்த்துகிறேன்,
ஊர் அறியப் பெயர் போற்றிட
ஒளிதரவே வாழ்த்துகிறேன்.

(கவிப்பொய்கை - தளத்திலிருந்து.)

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த மூத்த கவிஞர்கள்:

## கங்கையாளே!

- கவிஞர்
முருகையன்.


(1935 - 2009)

கங்கையாளே... கங்கையாளே!
காடு கழுவி வரும் கங்கையாளே!
எங்குமோடி... எங்குமோடி...
ஈழம் குளிரவைக்கும் கங்கையாளே!

நுவரெலியா முதலான உயரமலை
பயிலும் கங்கையாளே!
தவறாத வளமுடைய...
தன்மை பொழியும் எங்கள் கங்கையாளே...
கங்கையாளே... கங்கையாளே!

கந்தளாயும் மூதூரும்
காத்து வரவேற்கின்ற கங்கையாளே!
வந்து சேர்வாய் திருமலைக்கே
மாகடலில் போயிறங்கும் கங்கையாளே!

கங்கையாளே... கங்கையாளே!
காடு கழுவி வரும் கங்கையாளே!
எங்குமோடி... எங்குமோடி...
ஈழம் குளிரவைக்கும் கங்கையாளே!
●●●

ஈழத்து மெல்லிசைப் பாடல்
வரிகள்:
கவிஞர் முருகையன்.
பாடியவர்கள்:
எஸ்.கே பரராஜசிங்கம்
மற்றும்
கோகிலா சிவராஜா.
இசை:
எம்.கே.ரொக்சாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்புறாவே!

ஈழத்து மெல்லிசைப் பாடல்
வரிகள்:
கவிஞர் எம்.எச்.எம். ஷம்ஸ்,
பாடியவர்:
நிரோஷா விராஜினி
இசை:
பிரேமசிறி கேமதாஸ.

வெள்ளிச் சிறகடிக்கும் வெண்புறாவே - உந்தன்
வரவைக் காணவில்லை வெண்புறாவே
நெல்லு மணி பொறுக்கும் வெண்புறாவே - இன்னும்
நேரம் வரவில்லையோ வெண்புறாவே

ஓடையில் இப்போ நீர் வழிகின்ற
ஓசைகள் கேட்பதில்லை
வாடையில் பூக்கும் பூக்களின் வாசம்
பாதையில் வீசவில்லை

கோடைக் காட்சிகளால்
கொதிக்கும் உள்ளமெலாம்
கோரம் மாறவில்லை
கொடுமை தீரவில்லை

மாலையில் தேனாய் காதினில் வீழும்
பாடல்கள் கேட்பதில்லை
ஓலையில் பேசும் கிள்ளைகள் இன்று
ஒன்றையும் காணவில்லை

மேகம் இயந்திரமாய்
மிதக்கும் காரணத்தால்
தாகம் தீரவில்லை
தனிமை மாறவில்லை.

●●●

**- கவிஞர்**
**எம். எச். எம். ஷம்ஸ்.**



(1940 - 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்: 07**

# மஞ்சரி கவிதைகள்:

## அலங்கரிக்கும் கவிஞர்கள்:

- வசந்த தீபன்
- எம்சியே பரீத்
- மயிலிறகு மனசு ஷிபானா
- Dr. ஜலீலா முஸம்மில்
- கே. பாலன்
- வானம்பாடி முஜா
- மருதூர் ஜமால்தீன்
- சம்மாந்துறை மஷூறா
- மாஹிறா ஹமீட்
- புன்னகை வேந்தன்
- அலியார் T. O.
- ராஜகவி ராகில்
- செ. நாகநந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையில்லாத காலத்தின் வரைபடம்.

- வசந்த தீபன் -
தேனி மாவட்டம்,
தமிழ் நாடு.

கண்கள் தோட்டாக்களை
உமிழத் தயாராகிறது
இதயம் விசையை முடுக்க
தருணம் பார்க்கிறது
குறிக்குத் தப்ப
கனவுகள் முயல்கின்றன
நிலங்களைத் தின்கின்றன தொழிற்சாலைகள்
கிராமங்கள் கரைகின்றன
ஒளிய இடந்தேடுகின்றன
பறவைகளும், மிருகங்களும்
துக்கத்தை துக்கத்தால் துரத்தமுடியாது
சந்தோஷம் சகல வேதனைகளை மூழ்கடிக்கும்
காலாற நடந்து செல்வது சுகம்
மர்மமுடிச்சு இறுகுகிறது
புனைவாளனின் மூளை வெடிக்கிறது
புழுக்கள் பேசிக்கொண்டு வெளியேறுகின்றன
எவள் எவளோடவோ திரிந்தவன்
அவளோட சேர வந்திருக்கிறான்
அவனோடு இணைய
அவள் தயாரில்லை
கடந்து தான் செல்ல போகிறோம்
கசிந்து உருகித் தேங்காதே
காட்டாற்று வெள்ளமாய் பிரவகித்திடு
நொடி மணியாக விரைகிறது
மணி பெருகி நாளாய் வழிகிறது
நாள் கடந்து கடந்து
மரணமாய் முடிகிறது
நிறங்களின் உடைவில்
சிறகுகள் துளிர்க்கின்றன
விரிவோடுகிறது வானம்
பெருங்களிப்பின் உற்சவ சீழ்க்கையொலி
தெறிக்கிறது
நீலப்பளிங்காய் மிளிர்கிறது
நீருக்குள் கிடக்கும்
வாளாய் ஒளிர்கிறது
முப்பாட்டனின் முகச்செழுமையாய்
மரக்கா மலை
உடைந்த நீர்க்குமிழியாக
மறைந்து போனது பால்யம்
தானியங்கள் கொழித்த
இறந்த காலங்கள்
பேரன்பின் சுடருள் கருமை படர்கிறது
நிலங்கள் வழியாக
வாழ்க்கை நகர்ந்தது
தாவரங்களாகவே மனிதர்கள்
வேரற்று காற்றோடு அலைபடுதல்
இக்கால நீங்கா சாபம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேசம் போதும்

- எம்சியே பரீத் -

நீண்ட இடைவெளிக்குப்பின்
உனது சந்திப்பு
இன்னும் உனக்கு திமிர்தான்
நடிப்பாய்ச் சிரிப்பாயே
அதையும்
தொலைத்து விட்டாயோ
எனது புன்னகைக்கும்
உன்னிடம்
வரவேற்பில்லை
ஒன்றை மட்டும்
புரிந்துகொள்
விடுபட்டுப் போன
சுவாசங்கள்
பெறுமதியானவை
வேசம் போடாதே
அடுத்த நொடிகள்
உனக்கே சொந்தமில்லாமல் போகலாம்
உள்ளே நுழைய மறுக்கும் காற்றுடன்
உனது போராட்டங்கள்
செயலற்றுப்போகும்
மூடமறுக்கும் இமைகளை
யாரோ
கசக்கிக்கொண்டிருப்பார்கள்
இன்னும் யார்யாரோ
அடங்காமல் போன
உன்னை
அடக்குவதற்காய்
ஒரு புதைகுழியை
தேடிகொண்டிருப்பார்கள்.
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் கொஞ்சம்...

- மயிலிறகு மனசு
ஷிபானா அஸீம் -

இன்னும் கொஞ்சம்
எட்டியிருந்தால்
இன்னும் கொஞ்சம்
முயற்சித்திருந்தால்
இன்னும் கொஞ்சம்
பொறுத்திருந்தால்
இன்னும் கொஞ்சம்
நிதானித்திருந்தால்

இவ்வாழ்வில் எப்போதோ
கரைசேர்ந்திருக்கலாமென

அவ்வப்போது

எண்ணியெண்ணி
சுயவிரக்கத்தில்
உன் கண்கள்
பனிப்பதில்லையா?

இருந்தும்,

நம் வாழ்விற்கும்
நம் மரணவாசலிற்குமிடையிலான
தூரத்தை
யார்தான் நீட்டிவிடுவது?

உன் வாழ்வில்,

இன்னும் கொஞ்ச நொடிகள்
இன்னும் கொஞ்ச நிமிடங்கள்
இன்னும் கொஞ்சக் காலம்
நீடித்திருக்கக் கூடாதா என
ஏங்கச்செய்யும் தருணங்கள்
எத்தனையோ எத்தனையோ
இருக்கிறதில்லையா?

உண்மையில்,

அந்நொடிகள்
அந்நிமிடங்கள்
அக்காலங்கள்
நம் வாழ்வில் இன்னும்
கொஞ்சமென இருந்திருந்தால்
ஏதோ ஒன்றை இழந்திருக்க
மாட்டோமென
அடிக்கடி நினைப்பதில்லையா?

கண்ணீர் கசிய வழியனுப்பிய
நொடிகளிற்கிடையிலான ஒரு
சிறு உரையாடல்

ஆசையாய் கரம்பற்றி
சேர்ந்தே சென்ற
ஒரு அந்தியின் நிமிடங்கள்

மனதின் சிடுக்குகள்
குறையும் வரை
தேம்பித் தேம்பி அழக்கிடைத்த
ஒரு தனிமையின் காலம்

இன்னும்
கொஞ்சம் கிடைத்திருந்தால்
போதுமென நினைப்பது
போலவே

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சோகங்கள்

- Dr. ஜலீலா முஸம்மில் -
ஏறாவூர்.

விழிபிதுங்கும் விலைவாசி
விலைபோன பொருளாதாரம்
இரையாகும் மக்கள்
எங்கிலும் கொள்ளை
கொள்ளை நோயாய்
கொடுங்கோல் விலை
கொரோணா காலத்திலும்கூட
இந்த பயம் இருக்கவில்லை
சுரண்டல்களின் அகோரம்
சோரம் போன அங்கீகாரம்
தலையிலடிக்கும் கோரம்
தீராமல் தொடரும்
வறுமைத்தாண்டவம்
கவலை இல்லாத் தலைமைகள்
பச்சோந்திகள் உருவெடுத்த
அரசியல் அவலங்கள்
இக்கட்டிலும் இலாபம் தேடுகின்ற
சிறுமைகள்
விறுவிறுக்க ஓடும்
வியர்வைத்துளிகள்
மின்வெட்டில் வெந்து
போன மனிதங்கள்
எரிவாயு உயிர் வாயுவாய்
வாழ்வின் அடிப்படைத்
தேவைகள் நிலைகுலைந்து...

எதற்கும் வரிசை
எங்கிலும் வரிசை
எரிவாயுவிற்கு வரிசை
உணவு வாங்க வரிசை
உயிர் காப்பதற்கு வரிசை
வரிசையில் நின்றே
வெறுத்துப்போனது உலகம்
மரத்துப் போனது கால்கள்
ஊற்றெனக் கிளம்பி
உருகி ஓடும் வியர்வை
கடனும் வாங்க முடியா நிலைமை
திடமே இல்லாமல் ஒரு வாழ்க்கை

பரிதவிக்கும் ஏழைகள்
படாதபாட்டில் தூங்க முடியாமல்
குழந்தைகள்
மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்
இருதலைக் கொள்ளி எறும்பாய்
பற்றி எரியும் உள்ளத்தோடு
பற்றாத அடுப்புகளோடு
சமகால சோகங்கள்...

இறுதிப் பயணத்தை
ஞாபகப் படுத்தும் நேரங்கள்..
மறுமையும் மஹ்ஷரும்
நினைத்து வரும் அச்சங்கள்...

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பாசை.

- கே.பாலன் -
வடக்கத்தியான் பட்டி,
இந்தியா.

ஆச்சரியத்தில் தொடங்கி
அதிசயத்தில் தொடர்ந்து
ஆனந்தத்தில் விடைபெற்ற

இந்த நாளை -
எந்த பக்கத்தில் எழுதிவைப்பது

விழிகளுக்குள்
விழுந்து விழுந்து எழுந்து
சுவாச பைகளில்
அள்ளி வந்த உன் வாசத்தை

உரையாடலின் இடைவெளியில்
உதிர்ந்து உதிர்ந்து உடைந்த
பூவிதழின் புன்னகையை

தனிமையில் வந்து - நீ
தடவிச் சென்ற விரல்களை
கன்னத்தில் ஒத்திக்கொண்ட
திளைப்பை

ஓ...
காத்திருந்த காலமே

பூக்களை எப்படி
அலைகளாக அள்ளி வீசுகிறாய்
பூந்தென்றலை இப்படி
மழையாக அள்ளி தெளிக்கிறாய்

கனிகளை காயப்படுத்த
அணில்களுக்கு ஏன் சொல்லிக்
கொடுக்கிறாய்

கனவிலும் நினையாத நெருக்கம்
நினைவிலும் நிகழாத உருக்கம்
நெஞ்சை விட்டு அகலாத
விருப்பம்

மீண்டும்
ஒரு இளங்காலை பொழுதில்
சாரலை தூவிச் செல்லும்
தென்மேற்கு பருவமழையில்

நமது சந்திப்பு நிகழுமென்ற
நட்பாசையில் நனைந்து கொண்டே
நடந்து கொண்டிருக்கிறது மனது.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம் தோற்கும் பொழுதொன்றில்...

- வானம்பாடி முஜா -
நிந்தவூர்.

உயிரை இழுத்துப்பிடிக்கும்
உறவின் நம்பிக்கை வேர்கள்
உடைபடும் மாத்திரத்தில்
மனதின் கர்ஜனை
அவ்வளவு எளிதாகப்
புலப்படுவதில்லை.

சுயமுகம் கண்டதில்
கிழித்து தொங்கும்
இதயத் துண்டின் வாசகங்கள்
ஒருமுறையேனும்
மிரட்டி விரட்டிடக் கூடாதெனும்
பிரார்த்தனைகளை எச்சங்களிட

நிஜமிழந்த
அந்நேசத்தின் கவசம்
உடைந்த சேதி
அறிந்து கொள்ள வில்லையென
ஊமை வடிவிலும்
மகிழ்வினை ஒற்றிக் கொள்ளும்
எல்லைக்கோடுகளுமாய்

மெய் வருத்தி
சுய ஓட்டுக்குள்
ஒதுங்கிக் கொள்ளும்
வித்தியாசங்கள் குற்றப்பத்திரிகை
வாசிக்கட்டுமென.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவா இனி வாழ்வு?

- மருதூர் ஜமால்தீன் -

நாட்டிலே இன்றெங்கும் பஞ்சம்
நாடாளும் தலைகளெங்கு தஞ்சம்
ஓட்டுக்காய்த் திட்டமிடும்
ஓட்டைகள் திருந்தாது
இளையோர் படையணியே எஞ்சும்.

விலைவாசி விண்ணுயிர ஏற்றம்
விளைபொருளுக்காய் மக்கள் சீற்றம்
தலைமாறியாது பயன்
தகைமையற்ற கிழடுகளால்
மன்றத்தினுள்ளெங்கும் நாற்றம்.

எரிபொருளுக்கேமாற்றும் கேடி
எரிசினத்தால் மக்களவரைத் தேடி
பரிகாசம் பண்ணுகிறார்
பாதைகளில் பதறுகிறார்
சரித்திடுவார் எனவொளித்தவர் ஓடி.

ஏழையர் வாழ்விங்கு அச்சம்
ஏமாற்றிப் பிழைப்போரே உச்சம்
கோழையராக்கிட்ட
கொடுந்தலைக் கூட்டமெங்கே?
பட்டினிச் சாவொன்றா மிச்சம்.

பற்றில்லாப் பேர்வழியால் நாடு
பதறிட வைத்தோர்க்கே கேடு
புற்றுக்குள் பாம்பு
பதுங்கியது வீம்பு
விஷமினிக்கக்காதே ஓடு.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷரிக்கப்படாத சிறகுகள்

- சம்மாந்துறை மஷூறா -
மருதமுனை.

கணவனையிழந்த விதவையாயிருக்குமோ!
மகவையிழந்த தாயாய்,
அல்லது மனைவியையிழந்த
தபுதாரனாயிருக்குமோ?

எனக்குத் தெரியவில்லை,
அந்தக் காகத்தின்,
சோகம் பற்றி.

முன்வீட்டு வளையில்,
தனித்தொதுங்கி,
தலை கவிழ்ந்திருக்கும்,
கடும் சோகத்தால்.

சிலவேளை எங்கள்,
வீட்டு முற்ற ஜேம் மரத்தில்,
வந்தமர்ந்து கதறும்,
சகிக்க முடியாத நச்சரிப்பாய்.

தன் சோகம் எனக்குப் புரியுமென்றோ,
அது பற்றி நான்,
எழுத வேண்டுமென்றோ கூட,
அது நினைத்திருக்கலாம்.

இப்படித்தான் நாம்,
பலரது சோகங்களைப் பற்றி,
காது கொடுக்காமல்,
கலைத்து விடுகிறோம்,
கொஞ்சமும் இரக்கமில்லாமல்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் அழகு.

- மாஹிரா ஹமீட் -
கம்பளை.

உழைத்து வாழ்தல்
உயர்வைத் தரும்
கையேந்தி வாழ்தல்
இழிவைத் தரும்.

எண்ணும் எழுத்தும்
கண்ணெனக் கண்டு
கல்வியின் மூலம்
எழுந்து நிற்போம்.

உழைப்பை வாழ்வின்
மூலதனமாகக் கொண்டு
செய்யும் தொழிலே
கருமமெனச் செய்வோம்.

நாளும் பொழுதும்
தேனீயாய் உழைத்து
பூமியில் பரந்து
மகிழ்வாய் வாழ்வோம்.

திரைகட லோடியும்
திரவியம் தேடி
திண்ணிய நெஞ்சுடன்
தலைநிமிர்ந்து நிற்போம்.

வரவைப் பெருக்கி
செலவைத் திட்டமிட்டு
ஊதியத்தில் ஒருபங்கை
சேமித்து வைப்போம்.

போதுமென்ற மனதை
பொன்னாக எண்ணி
பொருட்களைப் பதுக்காது
திருப்தி கொள்வோம்.

பிறருக் கீதலில்
இன்பம் கொண்டு
பட்டினி துடைக்கும்
பக்குவம் கொள்வோம்.

வாணாள் முழுவதும்
நலமாக அமைய
வல்லோன் அருளை
வேண்டி நிற்போம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரின்பம் பூரிப்பைத் தந்திடுமே!

கலாபூஷணம் அ. மு. பாறூக்.
**- புன்னகை வேந்தன் -**
மருதமுனை.

**வா**ன்பரப்பில் காட்சிதரும் வான்மதி வெண்ணிலா!
வையகம் எங்கிலுமே ஒளிப்புனலைப் பாய்ச்சியதே!
சான்றோரின் நூல்களைப் புறக்கணித்து விட்டதனால்
சன்மார்க்கச் சிந்தனைகள் சீரழிந்து போனதுவே!

பிரபஞ்சப் பெரும்பரப்பில் வாஞ்சையில்லா நிலைமையினால்
புன்மைகளும் வன்செயலும் உச்சநிலை கொண்டனவே!
பிரளயமும் வக்கிரமும் வாட்டி வதைப்பதனால்
புண்ணியங்கள் செய்வதற்கு மானிடரைக் காணோமே!

விருந்தோம்பல், இரக்கம், கருணை, நல்லெண்ணம்
விறைப்பான உள்ளத்தில் எவ்வாறு ஊற்றெடுக்கும்?
அருந்தவமும் ஆன்மீகச் சிந்தனையும் ஊற்றெடுத்தால்
அகிலத்தில் பேரின்பம் பூரிப்பைத் தந்திடுமே!

உடுக்களின் நடுவே உலாவரும் வெண்ணிலா
உள்ளத்தில் உற்சாக வீணை மீட்டுவதால்
வடுக்களும் வலுவிழந்து மாண்டு மடிந்திடுமே!
வெண்ணிலா சஞ்சிகையின் கீர்த்தியும் ஓங்கிடுமே!

மாதர்குலம் மானிடரின் தாய்க்குலம் அல்லவா!
மங்கலமாய் வாழ்வதற்கு ஒளிவிளக்காய் இலங்கினரே!
தீதகற்றித் திண்மையான வாழ்வுதனை நேசமுடன்
திரவியமாய்த் தந்துதவி நின்றவரும் அன்னவரே!

பெண்குலத்தை இழிவாக்கும் அழகுராணிப் போட்டிகளும், நீச்சலும்
புவனத்தில் இல்லாத நிலைமை நிலைத்துவிட்டால்
பெண்குலத்தின் மாட்சியும் மகிமையும் எல்லாமே -
புண்ணியம் செய்தவரின் பட்டியலில் சங்கமமே!

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் பிறக்கட்டும் நாட்டில்.

- அலியார் T. O. -
சம்மாந்துறை.

குப்பி விளக்கும் கொழுத்த முடியாமல்
   கூடிய தெண்ணையின் விலையும்
உப்புக் கருவாடு முட்டை மீன் உணவுகள்
   உயர்ந்தது விண்தொடும் அளவில்
துப்பர வாக்கும் சவர்க்கார வகைகள்
   தூரமாய் போனதோ உலகில்
கப்பலில் வந்திடும் பொருட்களை இறக்க
   கைவசம் இல்லையே டொலரும்.

காட்டினில் பிடித்த தீயினைப் போன்று
   கட்டுப்பா டெதுவும் இல்லாமல்
நாட்டினி லின்று பொருட்களின் விலைகள்
   நாளொரு வண்ணம் உயர்வால்
வீட்டிலே வாழ்க்கை செலவு தாங்காமல்
   விரக்தியில் சிக்கிய மாந்தர் - கை
நீட்டிடும் நிலையில் இருந்து தவிப்பதால்
   நிம்மதி இழந்தது குடிகள்.

உணவுப் பொருளின் விலையேற்றம் கண்டு
   உறங்குது பூனையும் அடுப்பில்
கனவாகிப் போன தங்கத்தின் விலையால்
   கலங்குது கன்னியர் வீட்டில்
எண்ணை பசளை வேளைக்கு கிடைக்காமல்
   ஏங்குது பயிர்களும் வயலில்
பிணமதை எரித்தோர் புறப்பட்டுப் போனதால்
   புதுயுகம் பிறந்தது நாட்டில்.

வரிசைகள் குறைந்து பொருள்களும் மலிந்து
   வையத்தில் நீங்கட்டும் பஞ்சம்
எரிபொருள் விலைகள் சடுதியில் குறைந்து
   ஏருழவன் மகிழட்டும் நெஞ்சம்
உரவகை கிடைத்து வயல்நிலம் செழித்து
   உற்பத்திப் பெருக்கத்தால் நாட்டில்
அரிசுடன் மாவு பால்விலை குறைந்து
   அகலட்டும் கடன்சுமை எளிதில்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜென் கவிதைகள்.

- ராஜகவி ராகில் -

* குளத்தினைத் தவிர
தாமரைக்குத் தோழி இல்லை.

* மின்குமிழ் எரிகிறது
மின்சாரத்திற்குப் பூக்கவும் தெரிகிறது.

* என் உறக்கத்தைப்
பார்த்துக் கொண்டே இருக்கிறது
எனது தலையணை.

* நெருப்புக்கும் பசி உண்டு
மிச்சம் வைக்காமல்
வாயின்றி விறகினைச் சாப்பிடுகிறது.

* தான் கொலையாகுவதை அறிந்தால்
வாழை குலையே போடாது.

* ஆற்றுக்குக் கால்களே கிடையாது
விரைவாக ஓடுகிறது.

* ஓட்டைகள் உள்ள புல்லாங்குழலை
யாரும் வீசுவதில்லை
நேசிக்கிறார்கள்.

* அரசியல் சாக்கடை என்றவன்
எம்பியை வரவேற்க
மாலையோடு காத்திருந்தான்.

* புன்னகை உதிர்கிறதா
மலர்கிறதா?

* சூரியனைப் பார்க்க
பனித்துளி கொடுத்து வைக்கவில்லை.

●●●

ஜென்
கவிதைகள்
மனதின்
அந்தப்புரம்,
அறிவின் குகை.
அந்தப்புரத்தையும்
குகையினையும்
வெளிச்சமாக்கி
விடுகின்ற
அதிசயத்தை
ஜென்
கவிதைகள்
நிகழ்த்தி
விடுகின்றன.
கருத்தின்
பரப்பினைத்
திறந்த
வெளியாக
வைத்திருக்கும்
வல்லமை
இக்கவிதை
களுக்கு
உண்டு.
தேடலையே
தேட வைக்கும்
உயிர் ஞானம்
ஜென்
கவிதைகள்.

- ராஜகவி
ராகில் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி.

முடிவிலியின் அந்தரங்கத்தில்
பரந்து விரிந்திருக்கிறது
இந்த விண்வெளி

ஒவ்வொரு நட்சத்திரமும்
ஒவ்வொரு கோளும்
ஒவ்வொரு எரிகல்லும்
அளவில்லா சுதந்திரத்தோடு
திரிவதைப் பார்த்து
பொறாமைப்பட்டேன்

ஒளி ஆண்டுகளின் பாதையில்
பொடிநடை போடும் காலத்திற்கு
வழித்துணையாக புறப்பட்டேன்

கருந்துளைகளில் சிலந்தி வலை
பின்னி
அதில் குடியமர்ந்தேன்

விண்வெளியின் வெளிச்சத்தையும்
அந்தகாரத்தையும்
விலைக்கு வாங்க
ஆசைப்பட்டேன்

மனிதன் என்ற கர்வத்தில்
விண்வெளியை
அடிமையாக்க முயற்சித்தேன்
எடையிலும் நிறையிலும்
அடங்காத
ஒரு சிறிய அணுவின்
ஒரு சிறிய விசையில்
என் கர்வத்தை விண்வெளியிடம்
அடிமையாக விற்று விட்டேன்!
●●●

**- செ.நாகநந்தினி -**
பெரியகுளம்.

# வெயில்.

வெயிலை ஏன் யாரும்
ரசிப்பதுமில்லை
புகழ்வதுமில்லை

வெயில் ஒரு
வெளிச்சமான கருவறை
அந்த கருவறைக்குள்ளேதான்
கள்ளங்கபடமில்லா
ஒளிச்சேர்க்கை
ஜனனமாகிறது

வெயில்
உடல்களை
வியர்வையின் ஆவியில்
வேக வைத்து திண்பதாய்
நினைக்கிறோம்

உண்மையில் வெயிலின்
முத்தங்களே
நம் தட்டில் அன்னமாகி
வயிற்றை நிறைக்கிறது.
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்: 07

# படித்தவற்றில் பிடித்தவை:

## அலங்கரிக்கும் கவிஞர்கள்:

- வி. உ. இளவேனில்
- ஏரூர் கே. நௌஷாத்
- தாமோதரன் ஸ்ரீ
- டீன் கபூர்
- மலீஸ் அமீன்
- ஜே. வஹாப்தீன்
- கவி செல்வ ராணி
- ரோஷான் ஏ. ஜிப்ரி
- ப. தனஞ்ஜெயன்
- மேகா மிர்ஷா
- சு. சின்னத்தம்பி
- முகமட் றாபி
- ஷஹ்லா ஷரீப்
- வ. அதியமான்
- ஜன்ஸி கபூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

- வி. உ. இளவேனில் -
இந்தியா.

தனது
தளர்ந்த நாட்களில்
கடந்து வந்த வாழ்வை
நினைவு படுத்திக் கொண்டிருந்தார்
அப்பா

அருகே
அம்மா அமர்ந்திருக்க
மனம் திறந்தார்

இவ்வாழ்வில்
இவளுக்கு ஒண்ணும்
செய்யாமல் போகப் போகிறேன்
அவரின் விழிகள் கசிந்து
ஒழுகியது

கசிந்த அத் துளிகள் இறங்கின
கன்னங்களில்

அந்த துளிகள்
தங்கமாக
வைரமாக
மின்னத் தொடங்கின அம்மாவுக்கு

அன்பைவிட
உயர்ந்த அணிகலன் உலகில் இல்லை
என உணர்ந்தவள்தான்
அம்மாவாகிறாள்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதி

- ஏரூர் கே. நௌஷாத் -

மனிதனுக்கு கிடைத்த வரம்,
புனிதனாய் மாறுவதற்கும்
புத்துணர்ச்சி காணுவதற்கும்
ஒத்தாசையாய் அமைந்த உபகாரம்.

நித்தம் நடக்கும்
குத்துவெட்டுக்களையும்
கொடூர செயல்களையும்
அயலவர் கொடுக்கும்
அல்லல் ஆக்கினைகளையும்
பொறாமைத் தீயால்
பொசுக்கும் வார்த்தைகளையும்
இடை இடையே ஏற்படும்
இல்லற முறிவுகளையும்
சரிக்கட்டும் சக்தி
மறதிக்கு மட்டுமே உண்டு.

இனியவர்களின் இறப்புகள்
மறப்புகளால்தான்
மனதுக்கு மருந்திடப்படுகின்றன.

கிடைக்காத ஒன்றால்
தூக்கமும்
கிடைத்த ஒன்றால்
ஏக்கமும்
பறிபோனபோதெல்லாம்
மறதி மட்டும்தான்
மறுபடி வாழ்க்கையை
மலரச் செய்கிறது.

மறதி மனிதனுக்கு கிடைத்த
மகத்தான வரம்.
ஆனால் இன்று
மனிதமே மறந்து போயுள்ளதால்
அறுந்து போயுள்ளது சிரம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிர்த்த மரம்.

இலைகள் எல்லாம்
உதிர்ந்து போய்
மொட்டை மரமாய்
நின்றாலும்

இயற்கையுடன்
நாணமும் வெட்கமும்
அடைந்து
கூடலை நடத்தி

இத்தனை
இளந்துளிர்களை
பெற்றெடுத்து

தன்னால் இன்னும்
விருத்தி செய்ய
முடியும்

என்று காட்டியபடி
இளமையுடன்
நிற்கிறதே
இந்த துளிர்த்த மரம்..!
●●●

**- தாமோதரன் ஸ்ரீ -**
கோயமுத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரவர்கள்.

- டீன் கபூர் -

ஓர் ஆற்றைக் கடப்பதற்காக
எவ்வளவு வயதிற்கும்
ஆரோக்கியமாக இருக்க
முயற்சிக்க வேண்டி இருக்கிறது.
இடையில் வரும்
சதுப்பு நிலங்களையும்
புல், பூண்டுகளையும்
கொடிய நீர்வாழ்
உயிரினங்களையும்
ஆழமான நீர்ப் பரப்புகளையும்
கடந்து செல்வதிலுள்ள
பிரயத்தனங்களை
வெல்ல முடியும் போது
ஊரவர்கள் மிக இலகுவாக
அந்தப் பெருவெளியை நோக்கிய
ஆற்றைக் கடந்து செல்லத்
தூக்கிவிடுவார்கள்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகள்.

**- மலீஸ் அமீன் -**

ஓவியனின் வரைதலில்
நிறம் மாறினாலும், மாறாவிட்டாலும்
ஓர் ஓவியம் பிறக்கிறது
ஆனாலும்,
நாம் ரசிக்கின்றோம்..!

சமையல் அறையில்
அம்மாவின் சமையலில்
ஏதோ ஒரு பதார்த்தம்
குறைந்தாலும், கூடினாலும்
ஒரு வகை உணவு தயாராகிறது
ஆனாலும்,
நாம் சாப்பிடுகின்றோம்..!

இறைவனின்,
படைப்பில் வந்த மனிதர்களின்
குறைகளை மட்டும்
நாம்
புரிந்து கொள்ள
ஏன்
நம் மனம் மறுக்கிறது...?

மனதால் நாம்
மலடாகி விட்டோமா....?
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றுக்கு ஊனமில்லை.

- ஜே. வஹாப்தீன் -

நீர்
ஊற்றினால் போதும்
வேருக்கு
உறுஞ்சுவதற்கு
கற்றுக்கொடுக்கத் தேவையில்லை
மண்ணுக்குள்.

அடியில்
ஊற்றுவது மட்டுமே
உன்வேலை
கொடியில் கனிகள் சிரிக்கும்.

படியில் கால்வைத்து
எட்டு வைக்க முயன்றவர்க்கு
முடிவில்
வெற்றிக் கொடிகள் பறக்கும்.

விடிவெள்ளி
விண்ணப்பம் அனுப்பி
தேர்வுக்குள்ளாகி
அடிவானில் தெரிவதில்லை
விடியலை அறிவிக்கும்
வானத்து வரவேற்பு.

சிறகில்லாமல் பறப்பதற்காய்
காற்றுக்கு ஊனமில்லை
சுவாசத்தை உறுதி செய்வது
அதுதான்.
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவலை.

- கவி செல்வ ராணி -
திருச்சி.

ஒரு மணி நேரமாகியும்
உன்னைக் காணவில்லையென
உன் மனைவியை
தொடர்பு கொண்டேன்

அவன் ஆன்லைன் வீதியில்
அலைந்து கொண்டிருப்பான் என்றாள்

சரி நீ எங்கே இருக்கிறாய்? என்றேன்
நான் அடுத்த வீதியில்
அலைகிறேன் என்றாள்

சரி பிள்ளைகள் எங்கே? என்றேன்
இன்ஸ்டாவில் இருப்பார்கள் என்றாள்

பாட்டி எங்கே? என்றேன்
அவள் பப்ஜி விளையாடிக்
கொண்டிருக்கிறாள் என்றாள்

சரி நீ ஆசையாய் வளர்த்த
அந்த நாய் எங்கே? என்றேன்
அது எப்போதும் போல்
ஏசி அறையில் ஏதோ சீரியல்
பார்த்து அழுகிறது என்றாள்

என் கவலையெல்லாம்
5 ஜி பற்றித்தான்.
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிலுள்ள கடல்.

- ரோஷான் ஏ. ஜிப்ரி -

மிகுந்த சிரத்தையுடன் பொழுதை
எனது கரைக்கு திருப்பி விட்டேன்
நான் பனியில் சிறகுலர்த்தி
நிலவொளியில் வசிக்கும்
வானம்பாடியாகிறேன்
கனவுகளை சிதைக்காத இரவின்
சொல்வனத்தில் பழங்கள்
உண்ணும்
பறவையென் கவிதை
நீ... இனிமையின் சுவை தின்று
தீரென
இந்த இரவை
திறந்து வைத்திருக்கிறாய்...
உனதன்பு
இனிக்கும் கடல்
அருகே அமர்ந்து ரசிக்கும்
நேரங்களில்....,
வாழ்வு நகர்கிறது......
அணிவகுத்து நிற்கும்
நெருக்கடிக்குள்ளும்
எவ்வளவு அழகானது அருகாமை!
●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணம் தொலைத்த மலர்கள்.

- ப. தனஞ்ஜெயன் -

வரிசையாக அமர்ந்திருக்கும்
விருந்தினர்களைக் கவனித்து
பெண்கள் அனைவருக்கும்
தொடுத்த பூக்களைத்
துண்டாக்கித் தருகிறாள்
சுமங்கலி ஒருத்தி...

வரிசையின்
இடையில் பட்ட
விதவை ஒருத்தியின்
கைகளையும் மனதையும்
துண்டாடிவிட்டுத்
தாண்டிச்சென்றுகொண்டே
சிரிக்கிறது
சுமங்கலி தந்து செல்லும்
துண்டு முழம் பூ.

●●●

# 365 நாட்களிலும் மழை.

வேண்டும் என்ற தருணத்தில்
வானம் பார்த்து வேண்டினார்கள்
கடுமையாகக் காய்ந்து கெடுத்தது
வேண்டாம் என்ற பொழுது
தீவிரமாகப் பெய்து கெடுத்தது
எப்பொழுதும் துயரத்தோடு
அழுது தீர்க்கும்
உழவனின் கண்களில்
என்றுமே ஓயாது
பெய்து வருகிறது

வருடம் முழுவதும்
கண்ணீர் மழை

எந்த பருவத்திலும்
அவர்களின் இமைகள்
ஈரத்தோடும்
இதயம் காயத்தோடும்
தவிக்கிறது

துளிர்த்துக் காய்ந்தும்
அழுகியும் போகும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

- மேகா மிர்ஷா -

என்னை தெரிந்துகொள்ளவா
உன்னை தெரிந்துகொள்ளவா
இந்தப் பிறப்பு

என்னை தெரிந்துகொள்ள
முயற்சிக்கும் போது
உன்னை இழந்துவிடுகிறேன்

உன்னை தெரிந்துகொள்ள
முயற்சிக்கும் போது
என்னை இழந்துவிடுகிறேன்

ஆக மொத்தத்தில்
இழப்பதும் மீள்வதும்
மீள்வதும் இழப்பதும்
வாழ்க்கையானது.

●●●

# நீ

நீ என்னை படிக்காத வரை
எனக்கு எழுத கற்றுத்தராதே

நீ என்னை கைவிடும் வரை
என் இதயத்தை நெருங்காதே

நீ என்னை விட்டுச் செல்லும் வரை
என்னை அணைக்காதே

நீ போகும் வரை
என் தனிமையை மறந்து விடாதே

என்னை ஒரு பாதையில் கொண்டு
செல்ல வேண்டாம்
நான் தனியாக முடித்துவிடுவேன்

நான் தனியாக இருப்பதாக
உணர்கிறேன் என்று
எனக்கு ஒரு உணர்வை
கொடுத்துவிடாதே

என்னிடம் காதலை பற்றி பேசி
அதில் மட்டும் வாழ
வைத்துவிடாதே

நீ கவனம் சிதறிய பிறகு
என்னை அமைதிப்படுத்தி விட்டு
விட்டு விடாதே

என்னை உன்னால் காதலிக்க
முடியாதவரை
என்னை உன் மீது காதலில்
விழ வைத்துவிடாதே.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதிப் பார்த்தது என் எழுதுகோல்.

**- சுலைமாலெவ்வை சின்னத்தம்பி -**
பொத்துவில்.

எனக்குள் நானே சிரிக்கிறேன்
என்னவோ பின் அழுகிறேன்
என்னை நானே தேர்த்திக் கொண்டு
எழுந்து இருக்கின்றேன் நடுயிரவில்!!

என்னை காணவில்லை
என்று துடித்தவள்
என்னை கண்டதும்
எழுந்து மறைகிறாள் முதுமை கண்டு!!

எங்கே சென்றது அந்த இளமைக் காலம்
எழுந்து வா முதுமையை வீசி விட்டு
ஏனோ வர மறுக்கிறாய்
என் எதிரியானவள் முன்!!

எழ முடியாத கற்பனை இரவு வேளை
எழுதிப்பார்கிறது ஓர் ஆசையில்
எத்தனை ஜெம்மம் எடுத்தாலும்!!
எழுந்து வருமா? இளமை!!

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாய பூமி.

## - முகமட் றாபி -

மனசின் சந்தி
அது விசித்திர சந்தி

வெவ்வேறு நிலைகளில்
அமர்ந்து கொண்டு
அல்லது
இருவேறு திசைகளில்
நகர்ந்து கொண்டு
நானும் அவளும் சந்திக்கும் சந்தி

அது
அருவமான சந்திப்பு
மொழியிழந்த ஒரு தித்திப்பு

தனிமையில்
பார்வை எங்கோ
நிலைகுத்திய கணத்தில்
நகம் கொறித்துக்கொண்டே
சந்திப்பு நிகழும்

காற்றின் ஓரமாக
கை கோர்த்து
கைரேகை நெளிவுகளின் வழியே
மெல்ல நடந்து செல்வோம்

அதுவொரு மாய பூமி
பாதையின் மருங்குகளில்
மனதுக்கிதமான மலர்களை
சட்டென மலரச் செய்வோம்

அருவிச் சாரல்
குருவிக் கீச்சொலி
சுவர்க்கோழி அலறல்
எது தேவையோ
வரவழைத்து திளைப்போம்

சந்தணக்காட்டுச் செறிவில்
மிதப்போம்
பின்னணியில்
மௌனத்தின் கருவில்
ஒரு மாயகீதம் வழியும்

அங்கு
உற்றார் தொல்லையில்லை
ஊரவர் வசையில்லை
பண்பாடும்
இருமனங்கள் மட்டுமே
நடமாடும்

குவலயத்திலிருந்து
ஏதேனும்
இடையூறு வந்தால்
சந்தித்த தடயங்களழித்து
கணப்பொழுதில்
காற்றில் கரைவோம்

பின்
யாருமறியாமல்
எண்ணப்பறவை கூடு திரும்பும்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாது சொல்லி மீள வைப்பேன்?

- ஷஹ்லா ஷரீப் -

நீ விட்டுச்சென்ற
அதே இடத்திலே தான்
நான் இன்னமும் நிற்கின்றேன்
உன் பாதைகள் மாறிவிட்டன
உன் தேர்வுகள் மாறிவிட்டன
உன் தோழமைகள் மாறிவிட்டன
உன் சிந்தனைகள் மாறிவிட்டன
ஆனால் நான்
அதே இடத்தில் தான்
இன்னமும் நிற்கின்றேன்

ஏன் எனக்கு மாத்திரம்
அப்படி மாறிவிட முடியவில்லை
ஏன் எனக்கு மாத்திரம்
என் எண்ணங்களை
திசை திருப்பிவிட முடியவில்லை

இத்தனைக்குப்பின்பும்
ஒரு குறுஞ் செய்தியையேனும்
அனுப்பிவிட மாட்டாயா
தவறிய அழைப்பொன்றை
ஏற்படுத்திவிட மாட்டாயா என்று
காத்துக்கிடக்கும் என் நெஞ்சத்தை
யாது சொல்லி
மீள வைப்பேன்.

●●●

# யாரோ?

நான் இறந்துவிட்டால்
நீ எப்படி இருப்பாய்

எனக்கு பதிலாக அங்கு யாரோ
நடமாடுவார்கள்
எனக்கு பதிலாக அங்கு யாரோ
உன்னிடம் சிரித்துப்பேசுவார்கள்
எனக்கு பதிலாக அங்கு யாரோ
உன்னை கொஞ்சித்தீர்ப்பார்கள்
எனக்கு பதிலாக அங்கு யாரோ
உன்னை அணைத்துக்கொள்வார்கள்
எனக்கு பதிலாக அங்கு யாரோ
உன்னிடம் ஊ(கூ)டல்
கொள்வார்கள்
எனக்கு பதிலாக அங்கு யாரோ
உன்(என்) அத்தனை
நேசங்களையும்
களவாடிக்கொள்வார்கள்

இப்படியான ஒரு அச்சம்
உள்ளாற இருந்துகொண்டே
இருக்கும்
உன் நெஞ்சத்தில்
என் நேசத்திற்கு நிகராக
யாரும் நுழைந்துவிடுவார்களா
என்று

அப்படி நேர்ந்தால்
இக்கவியைக்காட்டி
அவர்களிடம் கூறிவிடு
"நீ அப்படி இல்லை"
என்பதை சேர்க்க
மறந்துவிட்டாள் என்று.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் தொண்டை.

இக்கணம்
இடது முலையைத்தான்
அருந்திக் கொண்டிருக்கிறது
ஆயினும்
அதன் கண்கள் முழுதும்
வலது முலையிலேயே
சுற்றி சுற்றி சுழல்கிறது

வலதை
உறிஞ்சி தீர்த்துவிட
யாரோ
காற்றோடு காற்றாய்
வானிலிருந்து
வேக வேகமாய்
இறங்கி வந்து கொண்டிருப்பதை
உறுதியாய் அறிந்திருக்கிறது
அந்த தளிர் விரல்கள்

பால் முலைகள்
இரண்டிற்காக
அதை தாங்கி நிற்கும்
தேகத்தையும்
தேகத்தை தாங்கி நிற்கும்
உயிரையும்
உயிரை தாங்கி நிற்கும்
வேறேதோ ஒன்றையும்
யாருக்கும்
துளியும் கிள்ளிக் கொடுக்க
மறுத்து
முற்றுமாய் உறிஞ்சிவிடத்
துடிக்கிறது
இந்த குட்டி பிசாசின்
அனல் தொண்டை.

●●●

# சுவரில் வாழ்பவன்.

**- வ. அதியமான் -**

ஒவ்வொரு முறையும்
எதேச்சையாக பார்க்க
நேர்கையில்
இமைக்கணம்
என் விழிகள்
அதிர்ந்தடங்குகிறது

எப்போதோ
தன்னைத் தானே
சுவரில் படம் வரைந்து
அதனருகே
தன் பெயரையும்
எழுதி வைத்திருக்கிறான்

பெரும்பாலும்
அது தன் முகம்போல இல்லை
என்பதாலா?
ஒரு வேளை
பத்தாண்டுகள் தாண்டிவிட்ட
இன்றைய முகமா?

கடவுளே
இந்த வீட்டுக்கு
மறுமுறை
புது வண்ணம் பூசும் வரை
அவன் உயிரோடுதான்
பார்த்துக் கொண்டிருப்பானா?

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு முகம்.

அகமும் புறமுமென
அலைகின்ற முகத்தினில்
அதிரும் உணர்வுகள்
அணைக்குதே வாழ்வினில்

உதட்டுப் புன்னகைக்குள்
உறைகின்றதே வன்மமும்
உள்ளத்தின் சோகம்
உறவுக்குள் பூவாகின்றதே

மெய்க்குள் மூழ்கும்
பொய்களை மறைத்தே
சாய்வார் வேலிபோல்
சாய்த்திடுவார் வேட்டையினில்

சீற்றத்தை மறைத்தே
சிரிப்பார் அன்புபோல்
தோற்றமும் மறைத்தே
ஏற்றிடுவார் மறுமுகத்தை.

●●●

- ஜன்ஸி கபூர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை என்பது...

**- றியாஸ் குரானா -**

கவிதை என்பது ஒரு இலக்கு. அருகில் இருப்பதைப் போல் தோன்றும், மிகத் தொலைவில் உள்ள ஒரு இலக்கு. மிகத் தொலைவில் உள்ளதைப் போல் அலைக்கழிக்கும், மிக மிக நெருக்கத்தில் உள்ள ஓர் அனுபவம்.

புரிந்து கொள்ளுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற செயற்பாடுகள் கவிதையை அடைந்துகொள்ள நமக்கு முன் தயாராக உள்ள பயண வழிமுறைகள்.

சில வேளை, எந்த வழிமுறைகளின் உதவியுமின்றி தோன்றி மறைந்துவிடவும் கூடும். அந்த இலக்கை அடைவது என்பதைவிட, அதை நோக்கிப் பயணிப்பதே கவிதையோடு இருப்பதாகவும் ஆகிவிடுகிறது.

மொழியில் நிகழ்ந்துவிடுகிற ஒன்றாக இருந்தபோதும், அது கற்பனையின் எல்லையற்ற வெளியில் சூழ்ந்திருக்கிறது.

கற்பனையையும், மொழியையும் ஓரிடத்தில் சந்தித்து, இரண்டும் இல்லாமல் தோன்றி மறையும் உணர்வுக்குச் சக்தி வழங்குவதுதான் கவிதை.

மொழியின் கற்பனையான பகுதிதான் கவிதை. கவிதையின் வெளிப்படையான பகுதிதான் மொழி. கற்பனை என்பது மேலதிக சிந்தனை. மொழி என்பது கருவி. தீக்குச்சியும், தீப்பெட்டியும் உரசிக்கொள்ளும்போது தோன்றி மறையும் சுடரைப் போன்றது கவிதை.

புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது, சுடர் தெரியும். முயற்சிக்கும் அளவைப் பொறுத்து அந்தச் சுடர் நீடிக்கும் காலம் வசப்படும்.

**- றியாஸ் குரானா.**

15-08-2022.

•••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..உங்களிடமிருந்து..




● "வெண்ணிலா" இதழ் 06 கிடைத்தது. வழமை போன்று வளவளப்பான மேனி. வெட்கப்பட்டு கதவிடுக்கில் ஒளிந்து கொள்ளும் பருவப் பெண்ணின் வசிகரம். கைக் குழந்தையொன்றை பனி படாமல் போர்த்துவது போல் பாகு பத்திரமாய் கை சேர்த்திருந்தார் அதன் ஆசிரியர்.

வெடிச் சத்தங்களோடு இலக்கியம் வளர்க்கும் இக்காலத்தில் ஐம்புலனும் அடக்கி எளிமையாக இலக்கியம் சாதிக்கும் அதன் ஆசிரியர் பாராட்டுக்குரித்தானவர்.

பிரகாசித்து பரவட்டும் "வெண்ணிலா".

**- கவிஞர் குர்ஷித் மஜீத்.**

● "வெண்ணிலா" காலாண்டு இதழ் 06 இன்று கிடைத்தது. பாராட்டக் கூடிய ஒரு பணி. கவிதைக்கென்றே ஓர் இதழ் கிழக்கில் மருதமுனையில் இருந்து வெளிவருகிறது. புகழ் பெற்ற பல கவிஞர்களின் கவிதைகள் வெளிவந்துள்ளன. இப்படியான ஓர் இடர் காலத்தில் இலக்கியம் படைப்பதும் ஒரு சஞ்சிகையாக வெளியீடு செய்வதும் சவாலான பணி. என்றாலும் ஆசிரியர் தொடர்ந்து இச்சாதனையை நிகழ்த்தி வருகிறார். எனது ஒரு கவிதையும் "வெண்ணிலா"வில் ஒளிர்வது மகிழ்ச்சி தருகிறது. ஆசிரியருக்கு நன்றிகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும். கவிஞர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

**- ராஜகவி ராகில்.**

● காலாண்டு இதழ் "வெண்ணிலா"வில் ஒளிர்ந்துள்ள என் கவிதை. கவிதையை பிரசுரித்த ஆசிரியர் அவர்களுக்கு இதயம் கனிந்த பிரார்த்தனைகளும் நன்றிகளும். கூடவே கவிதை வெளிவந்ததை அறியத் தந்த கவிதாயினி மயிலிறகு மனசு ஷிபானா தோழிக்கும் நன்றிகள்.

**- கவிதாயினி ஹுமதா ஏ. கப்பார்.**


● அயராத முயற்சியில் ஆழ்ந்திருக்கிறீர்கள். சஞ்சிகையிலும் அதன் செயற்பாட்டிலும் சிறந்த நேர்த்தியுள்ளது. பொருளாதாரத்தை கருத்தில் கொள்ளாது இலக்கியப் பணிக்கே உங்கள் காலத்தை அர்ப்பணித்திருப்பது வெண்ணிலாவின் வெற்றியாகும். மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**- கவிதாயினி சம்மாந்துறை மஷூறா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கப்பெற்ற கவிதைத் தொகுப்புகள்




நூல் : இரண்டாவது தெருவின் நிழல்
ஆசிரியர் : கவிஞர் மருதமுனை விஜிலி
பக்கங்கள் : 98
பதிப்பு : 2020
விலை : ரூபா. 400/=
வெளியீடு : அலிஸ் மீடியா.
தொடர்பு : 077 9797210



நூல் : பறவையின் உடையா நிழல்
ஆசிரியர் : கவிஞர் ஜமீல்
பக்கங்கள் : 84
பதிப்பு : 2021
விலை : ரூபா. 400/=
வெளியீடு : புதுப்புனைவு பதிப்பகம்.
தொடர்பு : 077 9689392



நூல் : மொட்டுக்களின் மெட்டுக்கள்
(சிறுவர் பாடல்கள்)
ஆசிரியர் : கவிஞர் ஏரூர் கே.நௌஷாத்
பக்கங்கள் : 69
பதிப்பு : 2019
விலை : ரூபா. 300/=
வெளியீடு : பண்பாட்டலுவல்கள்திணைக்களம்




நூல் : கருவறைக் காதல்
ஆசிரியர் : கவிஞர் மலீஸ் அமீன்
பக்கங்கள் : 62
பதிப்பு : 2022
விலை : ரூபா. 500/=
வெளியீடு : பைத்துல் ஹெல்ப் நண்பர்கள்.
தொடர்பு : 077 2788950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...**

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance




IATA

**MH Travels & Tours**

Since 1986

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

**Business & Tax consultation in the Heart of Kalmunai Town...**

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services

**elite**

**Biz & Tax Consultancy**

**No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062**
**Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com**

இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை - 03, டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி, மருதமுனை *Jesa Grafix* இல் அச்சிட்டு ஒக்டோபர் 2022இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org